சுபமஸ்து.

தமிழகம்.

வால்யூம் 2. } 1906-௵ மே௴ { நம்பர் 5.

சாஸ்திரப்பொருண்மாலை.

9. தூக்கத்தில் மனத்தெளிவு *

"விளங்காதவிஷயத்தை நினைத்து நினைத்து அல்லற்படாமல் படுக்கைக்குச்சென்று தூங்கு."—இதுவோர் நல்லபுத்திமதியே! ஏனெனில் சரீரம் தூங்கிக்கொண்டிருக்கும்போது மனது சும்மாவிருக்கிறதில்லை. அது வேலைசெய்துகொண்டேயிருக்கிறது. சில வேளைகளில் பொழுதுவிடிந்ததும் நமதுமனது ஒருவிஷயத்தைப் பற்றித்தெளிவாய் யோசிக்கக்கூடியதாயிருக்கிறது. இரவு எத்தனை மணிநேரம் அதையே நினைத்துக்கொண்டிருந்தாலும் பயனொன்றுங்காண்கிறதில்லை.

இதற்கோர் திருஷ்டாந்தம்: லூயி அகாஷிஸ்(Louis Agassiz) என்பவர் ஒரு பெரிய தாபரஜங்கமசாஸ்திரி. வெகுகாலங்களுக்கு முன் பூமியிற்புதைந்துகிடந்த மீன்களின் அங்கக்கட்டுகளைத் தெரிவித்து "பாஸில்பிஷ்ஷெஸ்" என்றவொருபிரசித்தநூலையும் மற்றுவேறு நூல்களையும்செய்தார். இவர் ஒருசமயத்தில் புராதனகாலத்து மீனொன்றின் உருவத்தை ஒருகற்பலகையில் எழுத

* இந்துகாலேஜ் பத்திரிகை வால்யூம் 6, பக்கம் 101.

வேண்டுமென்றுநினைத்து ஓயாமல் பதினன்குநாள் பிரயாசப்பட்டுத் தான்நினைத்த உருவம் ஒன்றாயிருக்கக்கற்பலகையில்விழுவது மற்றொன்றாக மனம்வெறுத்து விட்டுவிட்டார். பிறகு இரண்டு நாள் இரவுதோறும் மீனின் உண்மையான உருவத்தைக்கண்டதாகச் சொப்பனங்கண்டார். மூன்றாம்நாள் இரவில் தான்படுக்கப்போகும்போது ஒரு காகிதத்தையும் ஒரு எழுதுகோலையும் பக்கத்தில்வைத்துக்கொண்டு படுத்தார். சற்று நித்திரைபுரிந்து பாதிதூக்கத்திலும் பாதிசொப்பனத்திலும் இருட்டறையிலெழுந்து தனதுசொப்பனத்தில்தோற்றிய உருவத்தை எழுதினார். மறுநாள்காலையில் எழுந்து தான்தீட்டிய உருவத்தைப்பார்த்து "ஏது! இதுவா நாம் நினைத்தஉருவம்?" என்று ஆலோசனை பண்ணிக்கொண்டே கற்பலகையையெடுத்து இரவு தான்காகிதத்திலெழுதிய உருவைப்போலவே பலகையிற் செதுக்கிப்பார்த்தார். ஆச்சரியம்! கற்பலகையிற்செதுக்கப்பட்ட உருவம் இவர் சொப்பனத்திற்கண்ட உண்மை உருவைப்போலவே இருந்தது.

10. 'லாக்கே" ஜாதியார். ‡

'லாக்கே' ஜாதியார் 'மாலே' தீபகற்பத்தின் புராதனகாலத்து ஜனங்கள். அவர்களை 'மாலே' ஜாதியார் அடிமைகளாகவும் சுமை தூக்கும் மிருகங்களாகவும் பாவிக்கின்றனர். அவர்கள் பாஷையும் மாலேஜாதியார் பாஷையும் வெவ்வேறு. அவர் தலைமயிர் சுருட்டுமயிர். அவர் ஆடை மரவுரியாடையே. ஊதுகுழற்பிடித்து ஊதுவதிற்கைதேர்ந்தவர். ஒருவகைமரத்தின் விஷச்சாற்றைத் தடவிப் பாணப்பிரயோகஞ்செய்வார்கள்.

11. நாம்பார்க்கும் ஆகாசம். ‡

நாம்பார்க்கும் பலகோடி நக்ஷத்திரங்களும் சூரியர்களும் கிரகங்களும் சந்திரர்களும் ஒருவித மூலதாமத்திலிருந்து உண்டானவைகள். இந்த மூலதாமத்திற்கு மேனாட்டார் "நெபுலா" என்று பெயரிட்டார். இது எப்போதும் கண்ணாடியைப்போல் தெளிவாயும் கிரணங்களை ஊடுருவிச்செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறதென்று இதுவரையும் நினைத்திருந்தார்கள். ஆயினும் இந்தத் தாராமூலதாமம் சிலவேளைகளில் தடித்துப்போய்க்கட்புலனாகிறதென்று சிலவருஷங்களுக்குமுன் சாஸ்திரஞ்ஞர்கள் கண்டுபிடித்தார்கள். அது எப்படியெனில், ஆகாசத்தில் தென்றிசையில் சில நக்ஷத்திரங்கள் ஒரு கூட்டமாய் இருக்கின்றன. அவைகளுக்கு

‡ டீ இந்துகாலேஜ் பத்திரிகை.

ஆங்கிலத்தில் "பர்ஸீயஸ் †" என்றுபெயர். அக்கூட்டத்தில் இதுவரையும் காணப்படாத ஒரு புதுநக்ஷத்திரம் கட்புலனுயது. அந்தப்புதிய நக்ஷத்திரம் கண்ணிற்பட்டபோது அதனருகாமை யிலிருந்த ஒருமூலதூமப்படலம் தன்மீதுபட்ட கிரணங்களைப் பிரதிபிம்பித்துத் தானும்தெரிந்தது. அப்போது சாஸ்திரஞர் கள் ஆச்சரியமடைந்து ஒருமூலதூமப்படலம் தன்பின்னுள்ள பலநக்ஷத்திரங்களின் கிரணங்களை நம்மைநோக்கிவாராமல் தடுக் கச்சக்தியுள்ளதானும் சாதாரணவெளிச்சத்தைக் கக்கக் கூடிய அவ்வளவு தடிப்புள்ளதாயிருக்கிறதில்லையென்றும் கண்டுகொண் டார்கள். சிலவேளைகளில் ஆகாசத்தில் வெகுநீளம் படர்ந்துகட் புலனுகிய மூலதூமரேகை ஒன்றைநாம் காண்கின்றோம். அந்தரே கைக்கு ஒருபுறம் அனந்தகோடி நக்ஷத்திரங்கள் தெரிகின்றன. மற்றொருபுறத்தோ அவ்வளவு நக்ஷத்திரங்கள் தெரிகின்றன வில்லை. இதற்குக்காரணம் என்னவென்றால், நம்முடைய கண் ணிற்குத்தோன்றிய அந்தரேகை சில நக்ஷத்திரங்களே தோன் றிய அத்திசையில் கோடானுகோடி மைல் அளவாய்ப்படர்ந்து கிடந்த விசாலமான ஒரு தாராமூலதூமப்படலத்தின் ஒருவரம் பாகும். ஆதலால், அம்மூலதூமம் படராததிசையில் அனந்த கோடி நக்ஷத்திரங்கள் புலனுகின்றன. தூமம்படர்ந்த மற்றோர் திசையில் அத்தூமத்தால் மறைக்கப்படுதலால் அனேக நட்சத் திரங்கள் கட்புலனுகாமல் சிலநட்சத்திரங்களே தோற்றுகின்றன.

கட்புலனுகிய மூலதூமம் கவர்ந்துகொண்ட ஆகாயவெளியின் விஸ்தீரணம் மிகவும்பெரிது. அதன் அளவு கணக்கில் அகப் படாது. புதிது புதிதான பிரபஞ்சங்கள் அதனிடத்திலே உற் பத்தியாகின்றன. கட்புலனறியாத மூலதூமம் அகண்டமான ஆகாயவெளியெல்லாம் பரந்ததாக நாம் பாவித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு மூலதூமம் எங்கணும் பரந்த ஆகாயவெளி யில் படைப்புத்தொழிற்சக்தி அங்குமிங்குமொரு சுழலை உண் டாக்க, அச்சுழலிடத்தே அகப்பட்டுக்கொண்ட மூலதூமம் சுழன்று சுழன்று தடிப்படைந்து சூரியசந்திராதிதாரகாகணங் களைப் பிறப்பிக்கின்றது. இதுவே ஆகாயத்தின் சிறப்பு. ஆகாயம் அகண்ட வெட்டவெளியில் நிற்கின்ற அனந்தகோடி தாரா கணங்களின் ஜோதிமயமானது. அதனழகு நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. (இன்னும்வரும்).

பத்திராசிரியர்.

---

† இதற்கு நம்நாட்டில்வழங்கும்பெயர் தெரியவில்லை

தமிழ் நூல்களும் நூலாசிரியர்களும்.

8. இறையனாரகப்பொருள்.

இறையனாரகப்பொருளென்னு மிலக்கணம் திருவாலவாயிற் பெருமானடிகளால் செய்யப்பட்டதென்றும், இந்நூற்கு மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனா ருரை யெழுதினாரென்றும் பிரசித்தம். இது அகப்பொருளை யெடுத்தாளும் கிரந்தம்: அகமாவது பாங்கனும் பாங்கியும் தம்முட்களவின்கட் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் பற்பல விஷயங்களைக் கூறுவது. அதாவது "அந்தண ரருமறை மன்றலெட்டினுள்" இது காந்தர்வ வழக்கத்தை யனுசரித்து, பாங்கன் "ஈண்டுச்செய்த நல்வினைப்பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒரு பொழிலகத்து எதிர்ப்பட்டுப்புணர்வதும்" அதற்குப்பின் பிரிதல்முதலியன செய்தலும் வர்ணிக்கும். இதிற்கூறியிருக்கும் விஷயங்களுட்சில ஆங்கிலத்தி லின்னாட்களில் நடக்கும் விவாஹத்துக்குச் சமதையாகச் சொல்லலாம். அவர்களில் முதன்முதல், கலியாணமாதற்குரிய பிராயத்தா ளொருபெண் தன் மனதுக்கொத்த புருடனைக் கண்டவிடத்து அவனால் பலவகையுபசாரஞ் செய்யப்பெற்றுப் பின்னிருவருமனமொன்றிப் புணர்ந்து, சிற்சில சமயங்களில், தாய்தகப்பன்மார்களுக்கஞ்சி இருவரும் வேற்றிடஞ்சென்று (Elopement) அவ்விடத்து மணம் புரிந்து திரும்புவது இயற்கை. இவ்வழக்கமே பழைய தமிழ்நாட்டிலும் நடந்தேறி வந்திருக்கவேண்டுமென்பது தமிழிலக்கியங்கள் பலவற்றானும் அறியலாம். பாங்கனும் பாங்கியும் பிரிந்திருக்கும்போது மனம் வெதும்புதலும், இதனை யறிந்த தோழி பாங்கியை மறுபடி முதனாட்சென்ற பொழிலகத்து விட்டுப் பாங்கன் வருந்தருணமறிந்து நழுவி விடுதலும், தன்மகள் காரணமின்றி உடல் மெலிவதைக்கண்டு வருத்தமுற்ற நற்றாய் பெண்ணின் தோழியாலதன் காரண மறிதலும், பின்னிவ் வாண்மகன் தன் மகள் மனங்கவர்ந்ததற் கிரங்கலும், பாங்கனும் பாங்கியும் இல்லம் விட்டகன்று வேற்றுநாடு போய்விட்டபின், தாய் பார்ப்பனர் முதலியோர்களைக்கண்டு கேட்டுத் தெரிதலும் முதலிய பல துறைகளைக் குறிக்கும். இவை கிடக்க.

இந்நூல் இறையனாராற் செய்யப்பட்டதென்றும் இதற்கு நக்கீரனாருரை கண்டாரென்றும் சொல்லும் விஷயங்களை ஆராய்ந்தே கொள்ளல்வேண்டும். முதல்விஷயம் பிறகு கவனிப்போம். கணக்காயனார் மகனார் நக்கீரனார் இவ்வுரை செய்தாரென்று கொள்ளுவது ஏலாது. ஏனெனில், இவ்வுரை யெழுதப்பெற்ற வாறு குறிக்குமிடத்து உரைகாரர், "உப்பூரிகுடி கிழார் மகனார் உருத்திரசன்மனாவான் செய்தது இந்நூற்குரை யென்பாரு முளர்;" ஆயின், "மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு," உப்பூரிகுடி கிழார் மகன் உருத்திரசன்மனா யவதரித்த "குமாரசாமியாற் கேட்கப் பட்டதென்க" என்பதனால் உரைகாரர் காலத்திலேயே இவ்வுரை நக்கீரனாரதன்று, உருத்திரசன்மனுடையது என்னு மாசங்கை ஏற்பட்டிருந்ததாகவும் அதை இவர் மறுதலிக்கிறாரென்றும் விளங்கும். பின்னும் இவரே இவ்வுரை பரம்பரையாயிழிந்துவரும் முறையைக் குறிக்குமிடத்திலும், "மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரவிக்கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்குரைத்தார்; அவர் படியங் கொற்றனார்க் குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்குரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ச்சேந்தனார்க் குரைத்தார்; அவர் சொல்லூராசிரியர் ஆண்டைப்பெருங்குமரனார்க்குரைத்தார்; அவர் திருக்குன்றத்தாசிரியர்க் குரைத்தார்; அவர் மாதவனார் இளநாகனார்க் குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தார்; இங்ஙனம் வருகின்றது உரை," என்று, நக்கீரனார் காலத்ததன்று இவ்வுரையென்பது விளக்குகிறார். கடைசியில் "இங்ஙனம் வருகிறது உரை" என்பதனால் உரைசொல்லி வருபவர் பரம்பரையை யுணர்த்துகிறார். நக்கீரனாரே இவ்வுரை யெழுதியிருப்பின் இப்பத்துத்தலைமுறையும் குறிக்கமுடியாது. அது வருங்காலத்தைக் குறிப்பதாகும். ஆயின் "இங்ஙனம் வருகின்றது" என்பதினாலேயே "வரப்போகிறது" என்று கொள்ளவேண்டுவதில்லை; இப்பதின்மர் பத்துத் தலைமுறைகளைச் சேர்ந்தவர்களல்லர், சமகாலஸ்தர்களே; ஒருவரிடத்தொருவர் அடுத்தடுத்துப் பாடங்கேட்டார்களென்ன வேண்டும் எனின் அது ஏற்காது. முற்காட்டிய மேற்கோளை யுற்று நோக்கின் பரம்பரையே குறிக்கின்றது என்பதுதான் தோன்றும்.

அன்றியு மிவ்வுரையாசிரியர் முதன் முதல் அகப்பொருட்குரைசெய்த நக்கீரரேயெனின், இவர் பிறவாசிரியர்களின் கோட்பாடுகளை, "இனி ஒரு சாரார் உரைக்குமாறு" (ப. 29), "இது பொருந்தாது என்ப ஒரு சாரார்" (சூ. 4) "ஒரு சாரார் சொல்லுவது புணர்ந்தபின்" (சூ. 5) என்று மறுத்து எழுதுவதற்குக் காரணமே யில்லை. இவர்க்குமுன் இவ்விஷயம் எழுதினவர் ஒருவருமில்லாமையால் இவர் பிறர்மதங் களைவது மெங்ஙனம்? இவை இவ்வாறிருக்க.

இப்பாயிரம் பிற்காலத்தொருவர் எழுதியிருக்கலாம் உரை மாத்திரம் நக்கீரரதே என்பார் "இனிப்பாயிரம் உரைத்த பின்றை நூலாமாறு உரைக்கற் பாலது" (ப. 10) "இனி நூனுதலிய நூஉம் உரைக்கற் பாலது" (ப. 12), "அது பாயிரத்துள்ளே உரைத்தாம்" "அது பாயிரத்துள்ளும் உரைத்தாம்" (ப. 20)என்னும் பல கூற்றுக்களால் இவ்வுரையாசிரியரே பாயிரமும் எழுதினவராதல் வேண்டுமென்று உணரலாம்.

இனி யிவ்வுரைகாரர் உதாகரிப்பவெல்லாம் நெடுமாறன் என்னும் பாண்டியனைக்குறிக்கும் ஓர் பழங்கோவைச் செய்யுட்களே. இக்கோவையுட் பாடப்பட்ட மன்னன் சிலர் கருதுமாறு திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்திருந்து அவரால் சமணத்தினின்று சைவமாக்கப்பெற்றவனாகிய நின்றசீர்நெடுமாறன் என்று கொள்ளின், இந்நெடுமாறன் காலம் ஏறக்குறைய கி. பி. 7-ம் நூற்றாண்டின் மத்திய பாகமாகின்றது. ஆகவே உரையாசிரியர் காலம் திருஞானசம்பந்தர் காலத்துக்கு வெகு பிற்பட்ட தாதல் வேண்டும். ஆதலால் இவர் காலத்துக்கு வெகு வருடங்கட்கு முன்னதாயிருந்ததாகக் கொள்ளும் கடைச்சங்கத்திலிருந்த நக்கீரர் இவ்வுரையாசிரியராக இருக்கவே முடியாது.

இப் பலகாரணங்களால் அடியில் சொல்லும், ஊகம் ஒன்று தான் கொள்ளல் தகும்: அதாவது: இறையனாரகப் பொருளுக்கு உரை ஒருக்கால் முதன் முதல் நக்கீரனாரால் வாய்ப்பாடமாகச் சொல்லப்பட்டு மேற்கூறப்பட்ட ஆசாரிய பரம்பரையாயிழிந்து நீலகண்டற்குப் பிற்பட்ட ஒருவரால் புத்தகமாகத் தொகுக்கப்பட்டதென்பதே.

இப்பொழுது அகப்பொருள் சூத்திரங்கள் செய்தவராரென்று ஆராய்வோம். திருவிளையாடல், அகப்பொருள்பாயிரம் முத

லியவற்றுள், இது முதன் முதல் மதுரைத் திருவாலவாய்ப்பெருமானடிகளால், பாண்டியன் அகப்பொருளில்லையே என்று கொண்டிருந்த மனவாட்டந்தணிய, செப்பேட்டில் வரைந்து, தம் பீடத்தடியில் வைத்த நூல் என்று கூறியுள்ளது. இவைகளிலும் துணிவாய் இறையனாரே செய்தார் என்று கூறவில்லை. அன்றியும் சூத்திரங்களி லாங்காங்கு "என்மனார் புலவர்" (a) என்று பழம்புலவர் மதத்தை யெடுத்தோதுவார்போ லெழுதுகிறார். சர்வஞ்ஞான சோமசுந்திரக்கடவுளே எழுதுங்கால் புல்லறிவுடைய மனிதப்புலவர்கள் கூற்றைக் கூறவேண்டுவதில்லையே. ஆதலால் இவ்விலக்கணம் இறையனார் என்னும் ஓர் ஆசிரியரால் எழுதப்பட்டு காலாந்தரத்திலேயே திருவாலவாய்ப் பெருமானடிகள் என்று கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்று சிந்திக்க வெகுவாய் இடங்கொடுக்கிறது. உண்மையறிய இப்பொழுது மேற்குறித்தவை தவிர ஒருவழியும் காணோம்

அகப்பொருளுரையில் நெடுமாறன் என்னுமோர் பாண்டியனைப்பற்றிய கோவையொன்றின் பாட்டுக்களையே உதாகரிக்கிறாரென்று முன்னமே சொன்னோம். அவைகளினின்று இந் நெடுமாறனைப்பற்றிச் சிற்சில விஷயங்கள் வெளிப்படுகின்றன. இவ்வரசன் அடியிற்காணும் பல பட்டப்பெயர்கள் பூண்டவனென்று விளங்கும்:— விசாரிதன்[1] பராங்குசன்[2] தீந்தமிழ்வேந்தன்[3] உசிதன்[4] வரோதயன்[5] அரிகேசரி[6] மானதன்[7] இரணோதயன்[8] விசயசரிதன்[9] சத்துரு துரந்தரன்[10] என்பன. இவ்வரசன் பல யுத்தங்கள் செய்திருக்கின்றான். அவைகளில் பெரும்பாலும் சேரலர்களோடு புரிந்தன. செந்நிலம், ஆற்றுக்குடி, பாழி, நெல்வேலி, வல்லம், மணற்றி, மாத்தூர், களத்தூர், இருஞ்சிறை, குளந்தை என்னுமிடங்களில் செய்த யுத்தங்கள் யாரோடு என்று விளங்கவில்லை.

(a) "என்ப" (சூ. 6) "என்மனார் புலவர்" (சூ. 1) "புணர்ச்சிக்குரிய வென்ப" (சூ. 12) "மொழிப" (சூ. 18) பொருளவென்ப" (சூ. 30) "என்மனார் புலவர்" (சூ. 54).

1. பா. 12,48,63,161,170-ல் காண்க.
2. 3, 13, 27, 35, 71, 73 &c.
3. 2, 13, 28, 49, 67 &c.
4. 2, 14, 46, 83, 89 &c.
5. 16, 36, 41, 56, 97 &c.
6. 22,28,47,52,55 &c.
7. 163 &c.
8. 315 &c.
9. 153, 239,
10. 146, 198, 196.

விழிஞத்தில் நடந்த சண்டை இன்னாரோடு என்று சொல்லா திருப்பினும் இவ்வூர் சோனாட்டிலிருப்பதைக்கொண்டு அவ்வரசனோடேயே நடந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். கோட்டாறு, பூலந்தைசேவூர், நறையாறு, கடையல், [1] முதலிய விடங்களில் செய்த செருக்கள் சேரலனோடேயே செய்ததென்று வெட்டனக்கூறியுள்ளது. இவையன்றி சங்கமங்கை என்னுமோரிடத்தும் பெயர்விளங்கா ஓர் எதிரியுடன் பொருது ஜயம்பெற்றானென்றும் தெரிகிறது. (பா. 202, 266.)

திருஞானசம்பந்தர்காலத்திருந்தநெடுமாறனும்நெல்வேலியில் ஓர் போர்பொருதுளான் என்று பெரிய புராணம் கூறுகிறது.[2] தம் காலத்திலிருந்த பாண்டியனை நாயனாரும் தமிழறியும் பாண்டியனென்று விசேஷித்துக் கூறுகிறார்.[3] இப்பெயரும் இவ்வரசனுக்குண்டு என்பது மேற்காட்டிய கோவைச் செய்யுட்களின் மேற்கோளால் விளங்கும். சிலர் நெடுஞ்செழியனும் நெடுமாறனும் ஒருவனே என்று துணிகிறார்கள். ஆயின் நெடுஞ்செழியனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனென்றே கூவுதலானும், நெடுமாறனை நெல்வேலி வென்றானென்று விசேஷித்தல் வழக்கமாயிருத்தலானும் இருவரு மொருவராகார் என்பது ஒருதலை.

இனி இந்நெடுமாறனைக் குறிக்கும் கோவையுட் கூறியிருக்கும் ஊர்கள் பெரும்பாலும் திருநெல்வேலிஜில்லாவைச் சேர்ந்தவை. கோட்டாறு என்பது நாகர்கோயில் பக்கத்துள்ளது; பூலந்தை இப்பொழுது பூலம் என்று கடைகுறைந்து கொள்ளையாடும் மறவர்களுக்குப் பெயர்போன விடமாயிருக்கிறது. இது

---

1 "வானவனூற்றுக்குடியிகல் சாய்ந்தழியப்பொருகழல் வீக்கிய பூழியன்"
"வானவர்க்கா யன்று பூலந்தைப் போர்மலைந்தார்"
"சேவூ ரெதிர்நின்ற சேரலனை மாலங்கடைவித்த மன்னவன் வரோதயன்"
"வானுடையான் முடிமேல்வளை யேற்றியும் வஞ்சியர்தங், கோனுடையாப் படை கோட்டாற் றழிவித்துங் கொண்டவென்றி, தானுடையான் றென்னன் சத்துரு துரந்தரன்"
"சேரலன் றென் னறையாற்றழிந்து மனமாண்பழிய வைவேல்கொண்ட கோன்" &c. &c.

2 ஆயவரசளிப்பார்பால் அமர்வேண்டி வந்தேற்ற, சேயபுலத் தெவ்வரெதிர்நெல்வேலிச் செருக்களத்துப், பாயபடைக் கடன்முடுகும் பரிமாவின் பெருவெள்ளங், காயுமதக் களிற்றினிரை பரப்பியமர் கடக்கின்றார்.—பெ. பு.

3 பண்ணியற் றமிழ்ப்பாண்டியன் [தேவாரம்.]

நாங்குனேரிதாலூக்காவைச்சேர்ந்தது. கடையல் என்பது கடையம். இதில் கிழக்கடையம் இப்பொழுது ஒரு ரெயில்வேஸ்டேஷனுயிருக்கிறது. நெல்வேலி எல்லாருக்கும் தெரிந்த திருநெல்வேலிதான். குளந்தை திருக்குளந்தை என்று ஆழ்வார்களால் பாடப்பெற்ற ஸ்ரீவைஷ்ணவக்ஷேத்திரம். விழிஞமென்பது திருவநந்தபுரத்துக்குத்தெற்கே 6-மைலில் கடற்கரையோரத்திலிருக்கிறது. சங்கமங்கை என்பது இப்போது சங்கமங்கலமென்று வழங்கப்படுகிறது. பிற்காலத்தியவனுகிய வீரபாண்டியனும்[1] (ஒருக்கால் இவனிடம் சிற்றரசனுயிருந்திருக்கும்) தஞ்சவாணனும் வல்லமென்னுமிடத்துப் பெரியயுத்தத்தில் ஜயித்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறுர்கள். இவ்வல்லமே நெடுமாறனும் சண்டைசெய்தவிடமாயிருக்கும். இதுவும் திருநெல்வேலிஜில்லாவிலேயே தென்காசிப்பக்கத்து இருப்பதாகக் கேள்வி. முதல் ராஜராஜன் தகப்பனுகிய இரண்டாம் பராந்தகன் சேவூரில் ஓர்போர்வென்றதாக சாஸனங்கள் கூறுகின்றன.[2] இச்சேவூரே நெடுமாறன்போர்பொருத சேவூராகும்.

ஆதலால் பராந்தகன் சண்டைசெய்ததும் சேரரோடு என்னலாம். செந்நிலம், ஆற்றுக்குடி, நறையாறு, பாழி, மணற்றி, மாத்தூர் (வெண்மாத்தூர்,) களத்தூர், இருஞ்சிறை, என்னுமூர்கள் எவ்விடமிருக்கின்றனவோ விளங்கவில்லை. திருநெல்வேலிஜில்லாவில் தென்பாகத்துவிசாரித்தால் இவையிருக்குமிடம் தெரியவரும்.

நெடுமாறனே ஒன்றிரண்டு இடங்களில் சோழநாட்டுக்குமதிபதியாயிருந்தவனென்று கூறப்பட்டிருக்கிறது.[3] இது ஒருக்கால் உபசாரவழக்காயிருக்கலாமென்று தோன்றுகிறது. உண்மையறியக்கூடவில்லை.

---

1 "சிலபாண்டிய சாஸனங்கள்" என்னும் வியாசத்தடியில் தை மாதத்திய செந்தமிழில்காண்க.

2 S. I. I. VOL. P.

3 "பூலந்தைப்போரிடைப்பூழியர் கோனுட்புலம்பொடு செலச்செற்ற வேந்தனுறந்தை" (பா-13)

"பூழியன் குருந்தொசித்தகார்வண்ணம்போல் வண்ணன் காவிரிநாடன்" (பா. 145)

"செங்கோனுசிதனுறந்தை" (பா. 184)

"தேன்ரூய் கழற்கண்ணிச்செம்பியன்மாறன்" (பா. 207)

"பூங்கழற்காலார் மன்னுவேலரிகேசரியந்தண் புகார்" (பா. 52)

"அரிகேசரியந்தண்புகார்" (பா. 55) "பூலந்தை வென்றுன்புகார்" (பா. 62) சோழன் சுடர்முடிவானவன் றென்னன்றுன்றுதமன்னர் தாழ்மழையுருமேந்தியகோன் (பா. 117)

இவ்விலக்கணத்து 13-ம் பக்கத்து, கணவரோடிறக்க ஒருப்படும்ஸ்திரீகளின் மனத்துத்தோன்றும் பல அவஸ்தைகளையும் சொல்லி அவர்களுள், தம்கணவன் பிரிவாற்ருது சஹகமனஞ் செய்வோமென்பார்களே ஸதிகள்என்றுசொல்லியிருப்பது வெகு நன்ருயிருக்கிறது. பொதியில் என்பதற்கு, எல்லாத்தேவர்கட்கும் பொதுவாயிருக்கும் இல்லென்று ஒருபொருள் கூறப்பட்டுள்ளது (ப. 33). அன்னுட்களுட் பெரியவிழாக்களாகக்கொண்டாடப்பட்டன "அவை மதுரை ஆவணிஅவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்திரமே, கருவூர் உள்ளிவிழாவேயென இவைபோல்வன" என்று ஊர்துஞ்சாமைக்குதாரணமாக 16-ம் சூத்திரத்தினடியில் கொடுத்திருக்கிறது.

இப்புத்தகத்து மேற்கோளாக எடுத்தாளப்பட்ட கிரந்தங்களுள் சில அருமையானவை நெடுந்தொகைப்பாட்டு, அதனகம், கூத்தநூல், செம்பூட்சேயார் கூற்றியல் முதலியன. [1]

இவ்வுரையின்நடை வெகுசிறந்ததாதலின் தமிணடையை விரும்புவோர்யாவரும் மதிக்கர்பாலது.

து. அ. கோபிநாதராவ், M. A.

கோவிலின் வெளிப்பிராகாரம்.

(37-ம் பக்கத்தொடர்ச்சி)

மலைமுடியின் ஜோதியை ஒருதரம் கண்டபிறகு, அக்காட்சி சொப்பனத்தைப் போல அடிக்கடி முன்வந்து நிற்கிறது. தொலையாதவழி நடக்கும் காலையிலும் இவன் அக்காட்சியைத் தியானிக்கிருன். வரவர காட்சிதெளிவாகின்றது. ஆகவும், தனது பிரயாணத்தின் காரணத்தையும் முடிவையும்அந்தநிமிஷத்திலேனும் செம்மையாய் அறிந்துகொள்ளுகிருன். அப்போது அவன் மற்றவர்களைப்போலத் தள்ளாடி நடக்காமல் உறுதியாய் நடந்து

---

[1] இவ்வியாசம் எழுதிமுடிந்தபின் ஸ்ரீமான் கனகசபைப்பிள்ளையவர்கள் எழுதிய "1800 வருஷங்களுக்குமுன்னிருந்த தமிழ்நிலைமை" என்னும்கிரந்தத்தை வாசிக்கநேர்ந்தது; இக்கனவானும் இறையனாகப்பொருளைப்பற்றிநான்கொண்ட அபிப்பிராயமே கொண்டதுமன்றி அதையே சித்தாந்தமாயும் பிரயோகிக்கிருர்கள்.

சென்று முன்னிக்கொள்ளுகிறான். ஆனால் இவன் இன்னும் குறுக்குவழிக்குவந்துவிடவில்லை. மலையைச்சுற்றும் ராஜபாடை வழியே தான் இன்னமும் நடக்கிறான் என்றாலும், இவன் விஷயத்தில் நாம் ஒரு விசேஷத்தைப் பார்க்கிறோம். அது என்னவென்றால், உலகத்தில் நாம் நற்குணங்கள் என்று விவகரிக்கிறவொழுக்கங்களை இவன் அப்பியசிக்கக்காண்கிறோம். ஏதேனும் ஒருசமயத்தைக் கைப்பிடித்து அதன்வழியே ஊக்கத்துடன் நிற்கிறான். இவன் கைக்கொண்ட சமயம் இவனுக்கு மலையேறும் வழியையும் கடைசியாய்க் கோவிலைச்சென்று சேரும் மார்க்கத்தையும் கற்பிக்கிறது.

ஆதலின் இத்தன்மையான ஜீவாத்மாக்கள் என்றேனும் இப்பிரயாணம் முடியவேண்டுமென்று காண்கிறார்கள். சம்சார மோக்ஷத்திற்கு ஒருவாறு சொப்பனம்போல் ஒருவழியை நாடுகிறார்கள். பகுத்தறிவில்லாத மற்ற ஜீவகோடிகளிலிருந்தும் ஒருவகையில் பிரிந்து விடுகிறார்கள். இவரது சுறுசுறுப்பினாலும் கவலையினாலும் இவர்களை ஒருவன் தேர்ந்துகொள்ளலாம். மேலும், இவர்கள் அவ்வழியில் நிறைந்த கணக்கிறந்த கூட்டத்தார்களைப் பின்விட்டு முந்திவருகின்றனர். இவர்கள் துரிதமாய் நடக்கின்றனர். ஏனெனில் முன் கூறியதுபோலவே இவர்கள் வழிநடப்பின் காரியத்தைக் கண்டவர்கள்; தாங்கள் செல்லும் வழியின் முடிவை ஒருவிதமாகவேனும் தெரிந்தவர்கள். முடிவில் என்னவாகும் என்றகதியை ஐயந்திரிபறத்தெரிந்தவர்கள் இல்லையாயினும் ஏதோ ஒரு நுட்பமான புத்தி இவருக்கு உண்டாகிவிட்டது. ஆதலின் இவர்கள் தமது வழியில் அங்குமிங்குந் திரிதலில்லை. மலையைச் சுற்றியோடும் வழியூடு அப்புறம் இப்புறந்திரும்பாமல் ஒரே நோக்காய் நிதானமாய் நடக்கின்றனர். இவ்வாறு நடத்தலால் மற்ற ஜீவகோடிகளைக்காட்டிலும் வாழ்க்கையின் தூய்மையிலும், நற்குணப் பழக்கத்திலும், தமது சகோதரர்களான மனிதர்களுக்கு உதவிபுரியும் நோக்கத்திலும் இவர்கள் கைதேர்ந்து முன்னுக்கு வருகின்றனர். வரவே, சீக்கிரத்தில் அவ்விராசபாடையிலும் உயர்பதவிகளை யடைந்து சில குறித்தவழிகளில் அப்பியாசஞ் செய்துகொள்ளுகின்றனர். தமது அயலார்களுக்கு உள்ளன்போடு உதவிபுரியப் பயிலுகின்றனர். நமது சகோதரர்களும் நம்முடன் வரட்டும் என்று அனுதாபங்கொண்டு பக்கத்திலுள்ளவர் விரைவில் வர இவர்கள் உதவிபுரிகின்றனர்.

இவ்விதம் இவர்கள் அனுதாபமுங் காருண்யமும் மிகுந்து அயலாரை நாடி உதவிசெய்யும்போது, இவர்முன் ஓர் உருவும் வருகின்றது. அவ்வுருவம் கட்டழகமைந்த ஓர் காரிகை உருவம். அக்காரிகை முகம் மிகவும் கம்பீரமானது. அவள்முன் சிறுவிளையாட்டுக்கள் கூடாது போற்றுற்றியது. அவள் அருகேவந்து இவர்களை நோக்கி மலைமுடியில் நற்கதியைச் சேரக் குறுக்குவழியொன்று உளதாக ஏதோ சில வார்த்தைகள் பேசுகிறாள். இப்பெண்மணியைத்தான் உலகில் யாவரும் "சரஸ்வதி" என்கிறார்கள். இந்நாமகள் இவர்களைக் கடைக்கணித்து ஏதோ சில உபதேசங்கள் கொடுக்கிறாள். இவர்களை நல்வழி சேரக்காட்டிய நங்கையாகும் "சமயம்" என்பாள் இந்த "சரஸ்வதி"க்கு உடன்பிறந்தாள். இவ்விருவருக்கும் உடன்பிறந்தாள் மற்றொருத்தி. அவள்பெயர் "சேவகம்" என்பது. இம்மூன்று மங்கையர்களும் இப்போது ஒன்று சேர்ந்து நற்கதியைக் காமித்த நமது ஜீவாத்மாவைத் தமது காவலின்கீழ் அமைத்துச் சில உபதேச மொழிகள் கூறுகின்றனர். ஜீவாத்மாவுக்குப் புத்திவிலாஸம் ஏற்படுகின்றது. அஞ்ஞான இருளிரிய ஞானோதயம் ஆகின்றது. ஜீவாத்மா அப்போது ஒரு சங்கல்பம் செய்துகொள்ளுகிறான். "இனி நாம் நற்கதியின் சொப்பனத்தோடு மாத்திரம் நிற்கலாகாது. எத்தனைநாள் இந்த வழியிலே திரிவது. இனியாகிலும் நற்கதியில் பிரவேசிக்கவேண்டும்" என்று தீர்மானித்து வாழ்க்கை நாடோறும் நாம் அப்பியாசிக்க வேண்டியவிதி சேவகமே என்று அறிந்துகொள்ளுகிறான். இப்போது இவன் தீர்ந்த சங்கல்பத்தோடு "ஜீவகோடிகளின் வழியைத் திருத்துவோம்" என்று வாய்திறந்து சொல்லுகிறான். இதுதான் இவன் முதன் முதல் கூறிய பிரதிஞ்ஞை. "ஜீவகோடிகளுக்கு உதவிபுரிதல், ஈஸ்வர சேவகம்," என்பன இவன் மனந்துணிந்து கூறிய சொற்கள். இவன் செய்த பிரதிஞ்ஞை தீர்க்காலோசனைசெய்து தீர்ந்த பிரதிஞ்ஞைதானே? இந்த சங்கல்பம் நிறைவேறுமோ? கவனிப்போம்! மனிதனுக்குத் தவறுதல் இயற்கை! முன்னொருகாலத்தில் ஒரு மாகான் கடினவழியே நடந்தவன். செங்குத்தானவழியிற் கால்வைத்து நடந்த மாகாத்மா. மற்றொன்றையுங் கவனியாது தீவிரத்துடன் நடந்து ஜீவகோடித்திரளெல்லாம் பின்வர முன்சென்ற தீரன். மலைமுடியில் ஏகாந்தமாய் நின்ற முதற் கட்டிமாங்கனி. மானுட வருக்கத்தின் முடி

வான பயன். இவரே பிற்காலத்தில் "புத்தர்" என்று பெயர் தரித்தார். இவரைப்பற்றி ஒரு வேதமொழியுண்டு. அது யாதெனில், "இவர் கல்பம் கல்பமாகத் தனது சங்கல்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டார்," என்பதே! என்ன ஆச்சரியம்! நல்வாழ்க்கையின் முடிச்சூட்டாகிய மோக்ஷம் எளிதிற் கிடைக்கக்கூடியதா? மோக்ஷகாமி ஒருவன் முதன் முதல் ஈஸ்வரசேவகம் செய்வதாக உறுதிமொழி கொடுக்கவேண்டுமாம். இந்த சிஷ்யனுக்கு முன்னாக நற்கதி சென்ற பெரிய மகான்கள் இவனைக் கடைக்கணிக்கவேண்டுமானால் இந்த உறுதிமொழி அவசியமாம். முன்னே சென்ற மாகான்களுக்கும் பின்னேவருகின்ற இந்த சிஷ்யனுக்கும் பந்தம் இதுவே. இந்தப் படிவழியே போய்த்தான் இவன் பரீக்ஷாமார்க்கத்தில் காலடி வைக்கவேண்டும். கோவிலின் வெளிப்பிராகாரத்திற்கு வழி இதுவே. கோவிலின் வெளிப்பிராகாரத்தைக் கடந்து செல்வதற்கும் வழி இதுவே. கோவிலின் வாசல் சென்று சேருவதற்கும் வழி இதுவே.

கடைசியாய் ஜன்மம் ஜன்மமாய் உழன்று பிறப்புகள்தோறும் முயன்று பரிசுத்தம் பயின்று பெருந்தன்மைபடைந்து புத்தி விசாலித்து ஜன்மம் ஜன்மமாய் சங்கல்பித்து திடசித்தமடைந்து இந்த ஜீவன் தனது மனதைத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவிக்கிறான். முன்னொருகாலத்தில் பலவிதமான சந்தேகங்களோடு "நற்கதியடைந்தால் நலம்" என்று தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தானே! அதுபோலன்று! இப்போது இவன் சங்கல்பம் முற்றுப்பெற்று விட்டபடியால் இவன் கூறும் மொழி வாய்மொழியே. இவன் மொழிக்கு இப்போது ஒரு பெரும் சக்தியுண்டாய்விட்டது. "கதவைத்திற" என்று இவன் ஒரு கட்டளையிட்டாலும் தகும். இவன் வார்த்தை செல்லும். இவ்விதம் அதிகாரியான இவன் "நான் நல்வழி ஏறுவேன்" என்று வாய்திறந்து கூறிக்கோவிலின் வெளிப்பிராகாரத்திற்குக் கொண்டுபோய்விடும் வழியின் கபாடத்தில் தட்டினானேயானால், எவரே தடுப்பார்? இவனோ விடாமுண்டன் ஆய்விட்டான். ஆத்மதிடமோ வச்சிரம்! நற்கதி சென்றுதான் ஒரு கை பார்ப்பேனென்கிறான். "நீ முயலும் நிவிருத்திமார்க்கம் மகா கடினமான மார்க்கமப்பா!" என்றால், "ஆம்! அது மெய்தான். அது எனக்குத்தெரியும்," என்கிறான். மகாதீரன் இவன். தான் செய்யப்புகுந்த காரியம் இவனுக்கு நன்றாகத் தெரியும்.

மோக்ஷமடைதல் சுலபமல்ல, கஷ்ட சாத்தியந்தானென்றும் அதற்கு வழி இதுதானென்றும் இவனுக்கு நன்றாகத்தெரியும். இவன் இப்போது செய்யப்புகுந்த காரியம் மிகவும் அரியகாரியம். மானுடஜாதியார் யாவரையும் பின்வரவிட்டு ஒரு மூச்சாய்க் கைவல்லியத்தை அடையப்பார்க்கிறான். ஜீவராசிப்பேராறுவென்றால் மெதுவாக அலைபெருக்கி யசைந்து சப்ததீபங்களாலான பிரபஞ்சத்தில்நுழைந்து அனுபவமாகியபொருள்களை வாரித் திரட்டிக்கொண்டு தீவிலிருந்து தீவுபாய்ந்து சிறு பிரளயங்கள் செய்துகொண்டு காலம் கடந்து மனுவந்தரம் சென்று பெரும்பிரளஞ்செய்து மறுபடியும் மறுபடியும் சப்ததீபப் பிரபஞ்சம் நுழைந்து ஏழுமனுவந்தரஞ்செய்து முடிவில் கடவுளெனும் கடலிற் சங்கமம் ஆகப்போகின்றது. இந்தப் பெரியவாற்றின் வழியாய் மனுவந்தரங்கள் புகாது பெரும் பிரளயங்களும் சிறு பிரளயங்களும் நுழையாது சப்த தீவுகளிடையே செல்லாது பிரவிருத்தி மார்க்கத்தை விட்டுப் பல கோடி-ஜன்மங்களில் செய்யக்கூடிய மோட்ச சாம்பிராஜ்ஜியத்தை இன்றே இப்பொழுதே இவ்விடத்தே இந்த தீரனை ஜீவன் செய்யப்புகுந்தான்! என்ன கஷ்ட சாத்தியம்? இதனைக்கேட்கவே மூளை கலங்குகின்றது. மற்றவர் பல கோடி ஜன்மங்களில் இதனைச் செய்கின்றார். இவன் சில ஜன்மங்களில் செய்யப்போகின்றான். மற்றவர் பல கோடி கல்பங்களில் இதனைச் செய்கின்றார். இவன் சிலகாலத்தில் இதனைச் செய்யப்புகுகின்றான். அருமை! மலைப்பாதையை விட்டு உடனே குறுக்குப்பாதையிலிறங்கிச் செங்குத்தான மலைத்தொடர்புகளையேறிக் கோவிலின் கர்ப்பக்கிரகத்திற்குள்ளே போக நோக்குகிறான். அப்படியே ஆகுக! இவனுக்கிணையில்லை. இவனே தெய்வம்! இவனிடத்தே விதைபோல் அமைந்துகிடந்த தெய்வத்தன்மை இப்போது முளைவிட்டெழுந்து பயிராகி வடவிருட்சம்போல் கிளைவிட்டுப் பரந்து உலகத்திற்கு நிழலைத் தரப்போகின்றது. சுபமஸ்து!

(இன்னும் வரும்.)

பத்திராசிரியர்.

மைசூர்த் தமிழர்.*

மைசூரில் மனிதர் குடியேறினதைப் பற்றிய சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்குங்கால், ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் தமிழர்கள் மைசூர் நாட்டிற்குள் வந்து குடியேறியதிலும் கவனத்திற்குப் பாத்திரமான சங்கதி வேறில்லை. ராஜரீக நிர்ப்பந்தத்தாலோ, சமய நிர்பந்தத்தாலோ, புதுநாடுகளுக்குப் போய்ப் பார்ப்போம் என்னும் துணிகரத்தாலோ, பொருள் தேடவேண்டுமென்னும் அவாவாலோ தங்கள் சுதேசத்தினின்று வெளிப்பட்டு முன்காலத்துத் தமிழர் மைசூர் நாட்டைப் பொற்சுரங்கப் பிரதேசம்போல் விரும்பி நாடினார்கள். அலையின் பின் அலையாகக் கடல் பொங்கிவருதல் போல், தமிழர் கூட்டங்கூட்டமாய் மைசூருக்குட் சென்று குடியேறின விவரம் மைசூரின் பூர்வசரித்திரத்தை உற்றுப்பார்க்கும்போது நன்கு விளங்குகின்றது. முதற்காலத்தில் தெலுங்கரும் மராட்டியரும் பெருந்தொகையாக மைசூருக்குட்சென்று குடியேறினார்கள் என்றாலும், தமிழர் குடியேற்றம் என்னும் அருவி இப்போதுவரையிற் பாய்ந்துகொண்டிருப்பதைக் காணலாம். பெருங்கூட்டமாகப் பிழைப்பை உத்தேசித்து வலைசை வாங்கிவந்த விவசாயிகளான தமிழச் சூத்திரர்களுக்கு உதாரணம் பங்களூரிலும் அதற்கு அருகாமையிலும் குடியேறிய திகளர்கள். இன்றைவரையில் அவர்கள் பொறுத்த உழைப்பிற்கும், செட்டாக ஜீவிப்பதற்கும், தோட்டப்பயிர் போட்டும் பூக்கள் வளர்த்தும் பலவித விவஸாயம் செய்தும் துணிகரமான முயற்சிசெய்வதற்குஉதாரணமாக இருக்கிறார்கள்.

பிராமணர்களில் எல்லாருக்கும் முந்தி ஆதியில் குடியேறினவர்கள் சாங்கேதிகள் என்பவர்கள். இவர்கள் மைசூரின் மேற்புறத்திலுள்ள மலையரணும் செழிப்புமுள்ள பள்ளத்தாக்குகளில் அடைக்கலம் பெற்று, காவிரி முதலிய ஆற்றங்கரைகளில் பயிர் செய்து வாழ்ந்துவருகிறார்கள். வடமர், பிரகசரணத்தார் முதலியோர் பிந்திவந்தவர்கள்.

ஸ்ரீவைஷ்ணவப்பிராமணர்களுக்குள் முதல் முதல் மைசூருக்கு வந்தவர்கள் ஹெப்பார் என்று சொல்லப்பட்ட பெருங்

*மைசூர் ரிவ்யூவில் மகா-௱-௱-ஸ்ரீ வி. என். நரஸிம்ம ஐயங்காரால் எழுதப்பட்டது.

கூட்டத்தவர்கள். 8 நூற்றுண்டுகளுக்கு முந்தி தமிழ்நாட்டி னின்று சமய நிர்ப்பந்தத்தால் வெளிக்கிளம்பி ஸ்ரீ ராமாநுஜா சாரியார் மைசூருக்கு வந்தபோது இவர்களும் வந்ததாகத் தெரி கிறது. அந்தக்கீர்த்திபெற்ற சமயச் சீர்திருத்தக்காரர் சரித்தம் எல்லாருக்கும் நன்ருகத்தெரிந்தது. ஆகையால் அதை இங்கே சுருக்கமாகப் பிரஸ்தாபித்தால் போதும். விஷ்ணுவே ஸர்வோத் கிருஷ்டர் என்று அவர் கொண்ட கொள்கையைத் தானே கைவி டாத பக்ஷத்தில் தேகவாதனே அல்லது சாவு நேரிடுவது நிச்ச யம் என்று உணர்ந்து அங்குள்ளோர் செய்த இம்சை பொறுக் கமாட்டாமல் ஸ்ரீ ராமாநுஜாசாரியார் தன் ஜன்மபூமியிலிருந்து ஓட்டம்பிடித்து மைசூருக்குப் போய்ச்சேர்ந்தார். அங்கே அர சன் பிறர் சமயத்தைப் பகைக்காது பொறுத்திருக்கும் தன்மை யுள்ளவனுக இருந்தபடியாலும், யாதொரு அச்சமும் இல்லாமல் சுகமாக வாசம்செய்யகூடிய பத்திரமான இடமாக இருந்தபடி யாலும், அங்கே சென்று அடைக்கலம் பெற்ருர். அந்த ஆபத் தானகாலத்தில் அவருக்கு அடைக்கலஸ்தானமாக உதவிய மேற் கோட்டை, தொண்ணூர், சாலிக்கிராமம் முதலிய இடங்கள் இப்போது பரிசுத்த ஸ்தலங்களாகக் கருதப்படுகின்றன. அவ ரோடுகூட அவருடைய சிஷ்யவர்க்கத்தைச்சேர்ந்தவர்களாகிய பல ஸ்ரீவைஷ்ணவர்களும் வந்து நாட்டின்பலஇடங்களிற் குடி யேறினர்கள். இவ்வாறுவந்தடைந்த ஸ்ரீராமாநுஜாசாரியாரின் சிஷ்யவர்க்கத்தாருடைய சந்ததியார்தாம் தாங்கள் என்று ஹெப்பாரிகள் சொல்லிக்கொள்ளுகிருர்கள். 1891 ம் ஹூத்து ஜனகணிதக்கணக்கில் குறித்துச்சொல்லப்பட்ட 14 வேறு ஸ்ரீ வைஷ்ணவக்கூட்டத்தார் பிற்காலத்தில் தமிழ்நாட்டிலிருந்து வந்து சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். இவர்களுக்குள் சிலர் சுயுத்தமிழ்பேசுகிருர்கள் ; சிலர் வேறுமொழிகளோடுகலந்த தமி ழைப்பேசுகிருர்கள் ; இவ்வாறு அவர்கள்பேச்சுப் பலவிதமாக இருக்கிறது. சிலர் தங்கள் வகுப்புக்குள்ளேமட்டும் கொள்வனே கொடுப்பனே செய்துகொள்ளுகிருர்கள் ; சிலர் வேறுஇனத்தவர் களுடன் கூட்டுறவுவைத்துக்கொள்ளுகிருர்கள் ; சிலருக்குள் விரோதமான கூட்டுறவுவழக்கங்கள் உண்டு ; இப்படிப் பலவித மான வித்தியாசங்களுள்ளவர்களாக இருக்கிருர்கள். ஆனாலும் இவர்கள் எல்லாரும் காலத்தின்மிகுதியால் மைசூரார் என்கிற ஒரேவகுப்பாகப் பலப்பட்டு ஒத்துமை அடைந்திருக்கிருர்கள்.

இவ்வாறு சுற்றுப்புறத்து நாடுகளிலிருந்து உட்சேர்ந்த பல குடியேற்றஅலைகளுக்குள் இடைநின்றகாலத்தைக் கணக்கிட்டறிய வேண்டுமானால் அவரவர்கள் தங்கள் தாய்மொழியைஎம்மட்டுக்குச் சுயமாகப்பேசுகிறார்கள் என்று பார்த்தால் நன்றாய்த்தெரிந்துவிடும். மைசூர்வாசிகள் பேசும் தெலுங்கு, இந்தி, மகாராஷ்டிரம், தமிழ் முதலியன கருநாட்டகமொழியோடு தாராளமாகக்கலப்பதினால் பலவாறு வேறுபட்டிருக்கின்றன. அவர்கள் வரத்து எவ்வளவுக்கெவ்வளவு பிராசீனமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் ஆதிபாஷை கருநாட்டகமொழியுடன் கலந்து உருமாறியிருக்கிறது. புதிதாகவந்தவர்கள் தங்கள்பாஷையை முந்திவந்தவர்கள் கொச்சையாகப்பேசுவதைப்பார்த்துப் பரிகாசம்செய்கையைக்கண்டால் மிகவேடிக்கையாகஇருக்கும்; ஆனால் தாங்களும் தங்கள் முறைவரும்போது, நீக்கமுடியாத அதே தலைவிதிக்கு ஆளாகி அதேமட்டத்துக்குவந்துசேரவேண்டியிருந்தால் என்ன செய்கிறது என்கிறதை மாத்திரம் நினையாது மறந்துவிடுகிறார்கள். ஹெப்பார் என்கிற பதத்தைக்கவனித்துப்பார்த்தாலே இது விளங்கும். இதற்கு ஆதியில் ஹெப்பரவர் அல்லது பெரியபார்ப்பான் என்று பொருள் இருந்தது. கௌரவப்பேராக இருந்த இம்மொழி இப்போது சாமான்யப்பெயராகப்போய்விட்டது. மொழிகளுக்கு அர்த்தம்செய்யும்போது அது எந்த எந்த சொல்லிலிருந்து உத்பத்தியாகிறதென்பதைக் கவனிப்பது கூட அவ்வளவாக இல்லை; அதன் சரித்திரசம்மந்தத்தாலும் வழக்காலுமே பெரும்பாலும் பொருள்செய்கிறோம். சன்யாசி, பைராகி, சாது, உத்தமன், யோகி, எஸ்குயர், நைட், அரவாட்டு, வக்கலு, என்பவைகள் இதற்கு உதாரணம். இவ்வுலகில் மிகவும் மேன்மைபெற்று, அத்புதமெனக்கருதப்பட்டு, மிக்க அருமையானவைகளாகக்கொள்ளப்படும் வழக்க ஒழுக்கங்கள்கூட காலம் என்னும் நீக்கற்கொண்ணாத கரைக்கும்பொருளால் அலம்பப்பெற்று மலைப்புநீங்கி கண்கட்டிமந்திரம் விலக்கப்படும்போது, மிக்கசாமான்யமாகிக் கிரைப்பாட்டாகப்போய்விடுகின்றது. ஹெப்பார் ஜாதியாருக்குத்தலைவர்கள் இப்பெயர் தங்களுக்கு உரித்தானதல்லவென்று மறுக்கிறார்கள்.

புதிதாகத்தாங்கள் குடியேறிய மைசூர்நாட்டில்வந்து கொஞ்சகாலமாவதற்குள்ளேயே ஸ்ரீராமநுஜாசாரியாரின் சிஷ்யவர்க்கத்தாரின் சந்ததியாராகிய ஹெப்பாரிகள் மதாநுஷ்டானங்களை

அலெட்சயஞ்செய்து ராஜ்யதந்திர விவகாரங்களிலும் பொருள் தேடுந் துறைகளிலும் தங்கள் ஊக்கத்தைச்செலுத்த ஆரம்பித்து விட்டார்களென்று தெரிகிறது. மிக்கபுத்திக்கூர்மையுள்ளவர்களாயும், துணிகரமுள்ளவர்களாயும், உழைப்பாளிகளாயும், பிழைப்புக்கு இடங்கிடைக்கும் துறைகளிலெல்லாம் இடித்துத் தள்ளி முன்நிற்கும் தன்மையுள்ளவர்களாயும்இருந்தபடியாலும், தெய்வபக்தியும் மதாநுஷ்டானமும் மட்டும் வயிற்றுப்பாட்டுக்கு ஆதாரமாவது அரிது என்று விரைவிற்கண்டுகொண்டு, ராஜ்ய காரியங்களிலும் உத்தியோகங்களிலும் உத்ஸாகத்தோடு தலையிட்டு முயன்றார்கள். ஆபத்திலகப்பட்டுக்கொண்டவர்கள் தாம் புதுஇடங்களிற்போயகப்பட்டுக்கொண்டால் தங்கள் புதுநிலைமைக்குத்தக்கபடி துவண்டுநின்று முயலக்கற்றுக்கொள்ளுவார்கள். அதேமாதிரி இவர்கள் பிழைக்கும்வழியைத்தேடி முயன்றார்கள். ஆகவே இவ்வினத்தார் ராஜ்யதந்திரிகளாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் மைசூர்நாட்டில் முன்னிட்டுநின்று, அந்த நாட்டின் சரித்திரத்திற்கே வேறுஒரு உருக்கொடுத்தார்கள். சமயாசாரஒழுக்கங்களில் எவ்வளவு பின்னிடைந்தார்களோ அதற்கு ஈடாக ராஜ்யதந்திர ஊக்கங்களில் அவ்வளவுக்கவ்வளவு மேம்பாடடைந்ததாகத் தெரிகிறது.

மைசூர்நாட்டில் விஸ்தாரமாகப்பரவிய ஸ்ரீ வைஷ்ணவர்களில் மிக்க உடல்வலிமையும் பூர்ண ஆகிருதியுமுள்ள முட்கலியர் முக்கியமான ஓர் அம்சத்தவர்கள். நக்கஹல்லி என்னும் பிரத்தியேகமான கோட்டைகொத்தளங்களால் அரண்செய்யப்பட்ட மலைப்பிராந்தங்களில் வெகுகாலத்திற்குமுந்தி குடியேறினதாகத்தெரிகிறது. இதுவே ஒருகாலத்தில் ஒரு தனித்தாலூக்காவாக இருந்தது. பிறகு சென்னராயபட்டணம் தாலூக்காவோடு சேர்க்கப்பட்டது. அவர்கள் ஆதிகாலத்தில் ஸ்ரீரெங்கத்திற்குச் சமீபத்திலுள்ள உறையூரிலிருந்துவந்ததாகத்தெரிகிறது. அவர்கள் மைசூருக்குவந்து வெகுகாலம் ஆனபோதிலும், இப்போதும் அவர்களிற்சிலர் "எங்கள் பூர்வீகநகர் உறையூர்" என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவ்வினத்தைச்சேர்ந்தவர்கள் பெட்னூர் வரையில் நாட்டுக்குள் புகுந்து இப்போது நகர்ப்பிரிவு என்னும் இடத்திற் குடியேறியதாகத்தெரிகிறது. சமபூமியிலுள்ள ஜனங்களுக்குக்கிட்டாத மேட்டுநிலமாக எண்ணப்பட்டபோதிலும், இப்பிராந்தங்களில் துணிந்து, முட்கலியர் சஞ்சரிக்கலானார்கள்.

இப்போதுகூட கர்ணபரம்பரையாக வழங்கும் கதையின் பிரகாரம், தென்கசாலைசாமய்யா என்னும் ஓர் முட்கலியன், இக்கெரி என்னும் அரசர்கள்காலத்திலோ அல்லது அப்பிரதேசங்களை ஐதர் ஜயித்தபின்னோ நகர் என்னும் இடத்தில் நாணயசாலைக்குத்தலைவனாக அதிகாரம்பெற்று வாழ்ந்ததாகத்தெரிகிறது. இவர் சரித்திரம் மிகவும் விநோதமானதாகவும் அக்காலத்தில் மைசூர் நாட்டின் நிலைமை இத்தன்மையானது என்று தெரிவிக்கத்தக்கதாகவும் இருக்கிறது.

கர்ணபரம்பரைச் சரித்திரத் துணுக்குகள்.

நமது தஞ்சைநகருக்குச்சமீபத்தில் நெடுவாசல் என்று ஓர் ஊர் இருந்தது. அதற்கு அருகே பாளையத்துறைகொண்டான் என்று ஓர்தலைவன் இருந்தான். இவன் நாயிக்கர்மார்கள் நாளிலோ அதற்குப்பிந்தியோ, தஞ்சைராஜனுக்கு மிகவும் மனஸ்தாபம்வரும்படி நடந்துகொண்டானாம். ராஜா பாளையத்துறைகொண்டான் தலையைவாங்கிவிடும்படி ஆக்ஞைசெய்தான். அத்தலைவன் தெற்கே கண்ணந்தகுடிநாட்டிற்கு ஓடிப்போய் அங்கு இருந்த ஒன்பது குறுநிலமன்னர்களிடம் அடைக்கலம் புகுந்து "என்னைக்காப்பாற்றவேண்டும்" என்றான். கண்ணந்தகுடி நாட்டுத்தலைவர் ஒன்பதுபேரும் தங்கத்தால் ஒருதலைசெய்து அதைப்பாளையத்துறைகொண்டான் தலைக்கு மீட்சிப்பொருளாகக்கொடுத்தனுப்பி, ராஜாவுக்கிருந்தமனஸ்தாபத்தைநீக்கிப் பாளையத்துறைகொண்டானை முன்போல் அதிகாரத்தில் கொண்டுவந்து வைத்தார்கள். பாளையத்துறைகொண்டான் கண்ணந்தகுடி நாட்டாரிடத்தில் தனக்கிருந்த நன்றியறிவைக்காட்டும்பொருட்டு, தன் ஊருக்கருகே உள்ள இனாம் கிராமமாகிய சூழியக்கோட்டையில், ஒன்பது கண்ணந்தகுடிநாட்டுக்குடிகளைக்கொண்டுவந்து வைத்து அவர்களுக்கு அந்த ஊரை இனாமாகக்கொடுத்ததாகத்தெரிகிறது.

பாளையத்துறைகொண்டான் வம்சத்தில் உடன்கட்டையேறும் கொடியவழக்கம் அநுஷ்டானத்தில் இருந்துவந்ததாகத் தெரிகிறது.

உ. நா. அப்பாசாமி அய்யர்.

ஆயுள்விருத்தி நூல்.

(62-ம் பக்கத்தொடர்ச்சி.)

அதற்குக் காரணம் சுவாசத்தை உட்கொள்வதினுலும் இரத்தம் உஷ்ணத்தையடைவதோடும் கூட அவைகளின் மேல் ஆகாயத்திலுள்ள உஷ்ணத்தைக் கிரகித்துக்கொள்ளுவதினுலும் மிகுந்த உஷ்ணத்தையடைந்து குறைந்த ஆயுளையுடையவைகளாயிருக்கின்றன. (3) ஜலத்தில் வசிக்கிற பிராணிகள் எப்போதும் குளிர்ச்சியில் சம்பந்தப்பட்டிருப்பதினுல் அவைகளுக்கு(Evaporation என்னும்) நீராவி எழும்பி வறட்சியடையுந் தன்மை குறைவுபடுகிறது. (4) பிராணிகளில் (Consumption, அதாவது) சரீரத்தின் தசைமுதலியவைகள் நாளாவர்த்தியில் சேதமடைதல் எவ்வளவு குறைபட்டிருக்கிறதோ அவ்வளவுக்கு அவைகள் நீடித்த உயிர் வாழுகின்றன. இதற்குதாரணமாகக் கற்பாறைகளுக்குள்ளிருக்கும் தேரைகளைச்சொல்லலாம். அவைகளின் பேசி அல்லது மாமிசத்துக்குசேதம் மெதுவாய் ஏற்படுகிற நிமித்தம் அவைகள் தம் தேகத்தில் யாதொரு குறைவும் நேரிடாமல் ஜீவிக்கும் இயல்புடையவைகளாக யிருக்கின்றன. எவ்வளவுக்கு நஷ்டம் அல்லது சேதம் தீவிரமாய் புதிப்பித்தலையடைவதினுல் ஈடுபடுகிறதோ அதற்குத் தகுந்தபடி ஆயுள்விருத்தியடையுமென்பதற்கு ஐயமே யில்லை.

புழுக்கள், (Amphibious animals என்னும்) நிலத்திலும் நீரிலும் வசிக்கக்கூடிய பிராணிகள், தாவரவர்க்கத்திற்கும் ஜீவவர்க்கத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுடையவைகளாகிய இவைகள் தங்கள் சேதமடைந்த அவயவங்களின் சத்துக்கள் புதுப்பிக்கப்படுதலாலும், பக்ஷிகள் இறகுகளையும் மூக்கின் அலகுகளையும் புதுப்பிப்பதாலும், பல்லி, ஓணன், பாம்பு என்னும் பிராணிகள் (Epidermis என்று சொல்லப்படுகிற) மேற்றோலை நீக்கிப் புதிப்பித்துக்கொள்ளுதலாலும் ஜீவசக்தி பலப்பட்டு நீண்ட காலத்துக்கு ஜீவிக்கக்கூடியவைகளாகச் சொல்லப்படுகிறது. தாவரவர்க்கத்துக்கும் ஜீவவர்க்கத்துக்கும் உள்ள முக்கியமான வித்தியாச மெதுவென்னில், தாவரவர்க்கங்கள் அவைகளின் ஆகாரத்தை வெளியிலிருந்து தமக்குக் கிடைத்தபடியே உட்கொண்டு தங்கள் ஜீவனை நிலைபெறச்செய்கின்றன. ஆனல் ஜீவ

வர்க்கங்களாகிய அவயவப்பிராணிகளோ அப்படி அல்ல. அவைகள் முதன்மையில் தங்களுக்குக்கிடைத்த ஆகாரங்களை வயற்றில் ஏற்றுக்கொண்டு அன்னத்தினின்றும் ரசங்களைப்பிரித்துச் சகல அவயவங்களிலும் பரவச்செய்து தங்கள் தங்கள் நஷ்டங்களை நிவர்த்திக்கக்கூடியவைகளா யிருக்கின்றன. அந்த நியாயத்தை அனுசரித்து, ஜீவவர்க்கங்கள் தங்களுக்குள்ளேயே ஆகாரத்தை ரசதாதுக்களாக மாற்றி உபயோகிக்கவேண்டியிருப்பதால் மலம், வியர்வை, மூத்திராதியான கழிவு (Excretions) களும், பித்தம், உமிழ்நீர் முதலாகிய (Secretions என்னும்) கசிவுகளும் இவைகளுக்கு ஏராளமாய் ஏற்படுகின்றன. ஏற்கனவே எடுத்துக்காட்டியபடி ஜீவவர்க்கங்களுக்கு ஆகாரம் உட்கருவிகளிலிருந்து புறக்கருவிகளுக்குச் செல்லுவதாயிருப்பதினால் மரணம் நேரிடும்போது புறக்கருவிகள் முதலில் நாசமடைந்து உட்கருவிகள் பின்பு மரணத்தையடைவதைப் பார்க்கிறோம். தாவர வர்க்கங்கள் அதற்கு மாறாக அவைகளினுள்ளே யிருக்கும் சத்துக்கள் கெடுதலையடைந்தபோதிலும் கூட அவைகளின்மேலுள்ள உரி அல்லது பட்டை நல்லதன்மையிலிருப்பதினாலேயே வெகுகாலம் வரையில் பட்டுப்போகாமல் உயிரோடிருக்கின்றன. அநேக மரங்கள் பொந்து, பிளவு, நரை அல்லது சோர்வு முதலியவைகள் ஏற்பட்டிருந்தபோதிலும் அவைகளின் மேற்பட்டையின் ஒழுங்குத்தன்மையினாலேயே (நல்லஸ்திதி) நீண்டகாலம் வரையில் சேதமடையாமல் ஜீவித்திருக்கின்றதை நாம் பார்க்கிறோமல்லவா!

தாவரவர்க்கத்தின் ஆயுணிர்ணத்தையும் விர்த்தியையும் பற்றி எடுத்துக்கூறியதை இம்மட்டோடும் நிறுத்தி அவயப்பிராணிகளில் முதன்மையாகிய மனிதர்களின் ஆயுளைப்பற்றி விசாரிக்கப் புகுவோம். அதுவிஷயமாய் முதனூலில் சாங்கோபாங்கமாய்ப் பற்பல தேசங்களுள்ளும் ஜீவித்து நீண்டகாலம் சுகஜீவிகளாயிருந்து இறந்தவர்களின் பெயரையும் வயதையும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவைகளை இங்ஙன் ஒன்றன் பின்னொன்றா யெடுத்துக்கூறுவதானது நூலை வாசிப்பவர்களுக்கு இனிமை பயக்காதெனக் கருதி அவைகளின் முக்கியாம்சத்தை மாத்திரம் குறித்துச் சொல்லுதல் குணமென நினைத்துப் பின் வருபவைகளை எழுதலானேன். அந்நாளில் மனிதர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் 1,000-ஞல காலங்கள்

வரையில் ஜீவித்திருந்ததாயும் சொல்லப்பட்டிருக்கிறது. நம்மவர்களைவிட அவர்கள் திடசாலிகளாயும் ஆயுள்விருத்தியுள்ளவர்களாயு மிருந்தபோதிலும் கூட அவ்வளவு நீண்ட ஆயுள்ளவர்களாகச் சொல்லப்படுதல் மிகையேயாம். ஆனல் அதற்கும் ஒரு சமாதானம் ஏற்படுகிறது. அதென்னவெனில் முதனூலாசிரியர் சொல்லுகிறபடி கிறிஸ்து சமயிகளின் பழையாகமத்தை அனுசரித்த ஒருவருஷத்துக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற 12 மாதங்கள் கால அளவாக ஏற்படாமல் 3-மாதமாகவும் அதற்குப் பிற்பட்டு 8-மாதமாகவும் வரையறுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிகிறது. அப்படிக்கிருக்கும் பட்சத்தில் இப்போது 60-வயதுள்ள ஒருவனை 240-வயதுள்ளவனென்று சொல்லுதல் சகஜமே. ஆகையால் அக்காலத்திலுள்ளவர்களை ஜாஸ்தி வயதுடையவர்களென்று சொல்லுதல் ஒருவாறு பொருத்தமேயாம். ஆனல் பொது விதியாய் ஆயுள்விருத்திக்கு அமைந்திருப்பதானது யாதெனில்: எவனொருவனுடைய மனம் சாந்தியில் நிலைபெற்றுள்ளதோ அவனும் சரீரப்பயிற்சியினல் தனது தேகத்தைப் பலப்படுத்தியும், வெயில் காற்று வெளியாகாயம் பனி முதலியவைகளில் தன் சரீரத்தை ஹானி அடையாமல் பழக்கப்படுத்தியும், மிதமிஞ்சிய புலாலுணவை விலக்கியும், மதுபானம் சாப்பிடாமலும், மிகுந்த ஜலத்தைக் குடியாமல் அற்பசத்துள்ள உணவைமாத்திரம் புசித்து வருபவன் எவனே அவனும் ஆயுள்விருத்தி யடைந்து சுகஜீவிகளாய் உயிர் வாழக்கூடுமென்பது முதனூலிற் காட்டியுள்ள திருஷ்டாந்தங்களால் தெற்றன விளங்குகிறது. இட்டாலி, ப்ரான்சு, ஸ்பேயின், இங்கிலாந்து, கிரீஸ், இந்தியா முதலிய தேசங்களில் உதாரணம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் எந்ததேசத்திலும் எந்தக்காலத்திலும் நீண்ட ஆயுளுள்ளவர்கள் ஏற்படக்கூடுமென்பது நிலைபெறுகிறது.

முற்காலத்தில் மனிதர்கள் சாதாரணமான ஜீவியமுடையவர்களாகியும் பரிசுத்த ஆகாயத்தில் (open pure air) பெரும்பான்மையு மூலாவுவோர்களாய்க் கன்றுகாலி மேய்ச்சல், வேட்டை, கிருஷி முதலிய தொழிலை அனுசரித்தவர்களாயும் மனசமாதானமுடையவர்களாயு மிருந்தபடியினல் நீடித்தகாலம் ஜீவித்தவர்களானர்கள் ; இக்காலத்திலோ நாகரீகமுடையவர்களாய், அற்பசுகிகளாய், இயற்கை விதியை அனுசரியாதவர்களாய், மனச்சலனமுடையோர்களாயிருந்து வருவதினல் கடவுளால் கொடுக்

கப்பட்ட நீண்ட ஆயுளானது குறைவுபட்டுப் பால்யவயதில் மரணத்திற்கு இலக்காதல் சகஜமாய் நேரக்கூடியதாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

S. குமாரசாமி மேற்கோண்டார்.

தமிழகச்செய்தி.

நம் தாய்மொழியாகிய தமிழை விருத்திசெய்வதற்குத் தமிழகத்திலோ அல்லது தமிழர்கள் குடியேறிய புறநாடுகளிலோ தமிழ்ச்சங்கங்கள் கூட்டமாய்க்கூடியும் தமிழ்வித்வான்களும் தமிழ்ப்பண்டிதர்களும் தமிழபிமானிகளும் தனித்தனியேயாகியும் செய்யும் நன்முயற்சிகளை இத்தலைப்பின்கீழ் அடிக்கடி தெரிவிப்பாம்.

திருநெல்வேலி, மதுரை, திரிசிரபுரம், தஞ்சை, கோயம்புத்தூர், சேலம், சென்னை, விசாகபட்டணம் ஆகிய இந்த நகரங்களில் தமிழ்ச்சங்கங்கள் நடந்துவருகின்றன. இச்சங்கங்கள் ஆங்காங்கு அப்போதைக்கப்போது செய்துவரும் முயற்சிகளைத் தெரிவிக்குமாறு அச்சங்கங்களின் காரியதரிசிகளைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சேலம் தமிழ்ச்சங்கம்.

தமிழை அபிவிர்த்திசெய்வதே இச்சங்கத்தின் நோக்கம். இச்சங்கம் சென்ற 1905ஸு ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைவர் ஸ்ரீமான் நல்லசாமிபிள்ளையவர்கள். இச்சங்கத்தில் சென்ற வருஷம் 35 கூட்டங்கள் கூடித் திருக்குறளில் 24 அதிகாரங்கள் படிக்கப்பட்டன. பத்துப்பாட்டினின்றும் கலித்தொகையினின்றும் சில பாடல்கள் படித்துப் பொருள் தேர்ந்தனர். பதினொரு அரியவியாசங்களைத் தக்க தமிழ்ப்பண்டிதர்களைக்கொண்டு படிப்பித்தனர். சங்கத்தின் உபயோகத்திற்குச் சில புத்தகங்களை வாங்கியும் சிலவற்றை இனாமாகப்பெற்றும் ஒரு சிறிய புத்தகசாலைக்கு வேண்டிய அங்கங்களைத் தேடினறனர். இந்தச் சங்கத்தின் முதல்வருஷாந்தர மகோத்ஸவம் சென்ற ஏப்ரல்மாசத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. தமிழகத்தின் தற்கால வரசான ஸ்ரீமான். போ. பாண்டித்துரையவர்கள் அக்

காலத்தில் அக்கிராசனம் வகித்தார்கள். அன்றுதினம் பல ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்கள். அங்கத்தினர் விருந்தோடுண்டு, ஏற்பாடுற்றபோது வித்வ சம்பாஷணைசெய்து, பிறகு வருஷாந்தர அறிக்கையைப்படித்து, இல்லற விஷயமாய்த்திருக்குறளின் அபிப்பிராயங்களை வெளியிட்டு ஒரு வியாசம் படிப்பித்து, சபாநாயகர் இனிய வாய்மொழிகளைக் கேட்டானந்தித்து, சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் அளித்து, அகமிகிழ்வுற்றனர். இவ்விதம் எவ்வருடமும் இச்சங்கம் மகோத்ஸவங்கொண்டாடிக் களிக்குமாறு அருள்புரியும்படி ஈசனை வேண்டுகின்றோம்.

தஞ்சைத் தமிழ்ச்சங்கம்.

சென்ற மாதத்தில் நாங்கள் கம்பராமாயணத்தில் கைகேசி சூழ்வினைப்படலத்தையும் சிலப்பதிகாரத்தில் இரண்டாவது மனையறம்படுத்தகாதையினையும் படித்து முடித்தோம். கலாசாலைக்கு இப்போது விடுமுறைநாட்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

இத்தாய்ச்சங்கத்தின் ஐந்தாம்வருஷ மஹோத்ஸவம் நாளது மாதம் 24௳ நடக்கப்போகின்றது. அக்கூட்டத்தில் மஹாமஹோபாத்யாயர் ஸ்ரீமத். உ. வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள்.

குண்டலகேசி.

முன்றான் பெருமைக்கணின்றான் முடிவெய்து காறு
நன்றேநினைந்தான் குணமேமொழிந்தான் றனக்கென்
றொன்றானு மில்லான்பிறர்க்கே யுறுதிக்குழந்தா
னன்றேயிறைவனவன் சரணுடுமன்றே (1)

நோய்க்குற்றமாந்தர் மருந்தின்சுவை நோக்ககில்லார்
தீய்க்குற்றகாதலுடையார் புகைத்தீமையோரார்
போய்க்குற்றமூன்று மறுத்தான்புகழ்கூறு வெற்கென்
வாய்க்குற்றசொல்லின் வழுவும்வழுவல்லவன்றே (2)

பத்திராசிரியர்.

புடைபரந் தெங்கும் போர்த்திட வருந்தும்
மன்னுயிர் போலவும், மறலியின் பாசப்
பின்னலிற் சிக்கிப் பெருந்துயர் கொள்ளுஞ்
சிவனைப் போலவும், சேண்மதிற் பட்ட
பாவக்ற் கீந்த பசுந்தள் ரனையார்
பதைத்து வருந்தினர்; பார்ப்பவர் பயங்கொளக்
குதைவரிச் சிலையிற் கொடுங்கணை போக்கினம்;
குந்தா லிப்படை கோடரி குறுந்தடி
சிந்தா குலமுறச் செலுத்தினம்; கவண்டிக்
கற்களை யெறிந்தோம்; கரும்பொற் குண்டுகள்
பற்பல விடுத்தனம்; பாயிருள் பரந்த
வானிடை யிடியும் வயங்கு மின்னலும்
மானவே புகையிடை மலிந்தன சுடரொலி;
மண்ணினுங் கல்லினும் வகுத்த மதிலின்
எண்ணிலா முடியுறப் பிடித்தன குண்டுகள்.
தகர்ந்த முடியெலாந் தசமுகன் றலைகளை
நிகர்த்தன; வேழ நெட்டிருப் புலக்கை
வாங்கி மதிலின் வலிகெட விடித்தன;
ஆங்கொரு புடையி னரணடி பறித்தனர்
பாரைமண் வெட்டிப் படைகளால் வயவர்;
ஆறைமீ தேறியு மகன்றிடப் பிளந்த
அரண்வழி நுழைந்து மார்த்தனர் வீரர்;
பெருந்தீ யிட்டனர்; பிடித்தனர் சிலரை,
முடித்தனர் பலரை, முழக்கினர் பேரி;
கொடிப்படை யாரியன் கோட்டையுட் புகுந்து
வித்தியா ரண்ய வெற்றிக் கொடியினை
மத்தியி னட்டினன் மதின்முடி துலங்க;
இத்தகை முடிந்த திஞ்சியின் முற்றுகை,
எத்திசை யும்புக ழேந்தலே!

விசுவ. இனிதாம்!
எண்ணிய வண்ண மியற்றினன் றிறலோன்;
நண்ணுக நாகனை; நாற்பெரும் படையுடன்
மானுவின் சேனையை மலையுமா றெழுவன்
கோலநீ ரூற்றின் குளிர்கரைப் பாங்கர்.
இவ்வுரை யுணர்த்தி யிறைவனச் சுதனை

அவ்வயிற் றாண்டுமா றரியநா தற்குச்
செப்புக. போதி, செந்தமிழ் வல்லாய்!
கச்சி. ஒப்பருஞ் சீர்த்தி யுயர்படைத் தலைவ!
குச்சைய்ங் கடகரிக் காவலன்
அச்சுதன் பின்வந் தமர்நோக் குவனே!

களம்—2. முற்றும்.

அங்கம்—5. களம்—3.

விசுவநாதன் தனது பெருஞ்சேனையோடு கிருஷ்ணாநதியின் தென்பால் மாலுவை எதிர்த்தான். போரில் மாலுவின்சேனை உடைந்தோட அவனும் புறங்காட்டி ஓடி நதியின் வடபாற் புக்கனன். இதைக்கேட்ட சுல்தான் இஸ்மேலடில்ஷா மிகவும் வருந்திப்போர்செய்யுங்காலம் இது அன்றெனநினைத்துச் சமாதானஞ்செய்துகொள்ள விரும்பிவந்தனன். அச்சுதன் தனது ஙாவதநாடு தன்வசப்பட்டால் சமாதனம் ஆகுமென்று கூற; அன்று தினம் வெற்றிகொண்ட விசுவநாதன் உடன்படிக்கையைப் பூர்த்திசெய்யச் சென்றான். இக்களத்தில் விசுவநாதன் போர்த்திறம் மதுரைப்புலவனால் அச்சுதனுக்குக் கூறப்படுகின்றது.

அங்கம்—5. களம்—3.

இடம்.—கிருஷ்ணாநதியின்தென்கரை. அச்சுதராயன் படைவீடு.
காலம்—எற்பாடு.

(அச்சுதராயன், ஜீவராய், கச்சிப்புலவன் முதலானவர்கள் வீற்றிருப்ப)

(நேரிசையாசிரியப்பா.)

அச்சு. வேகவெங் காலென வெள்ளப் படையுடன்
நாகநீண் மதிலை நாடிப் புக்கனன்;
முற்றுகை முடித்து மூதெயில் கொண்டு
வெற்றியம் பதாகை மீதுற நாட்டிய
ஆரிய நாத னரும்போர்க் களத்தில்
நேரலன் மாலுமுன் னின்றுபோர் செய்யச்
சென்றன னுதன் சேர்மினென் றுரைப்ப,
நன்றெனப் போந்தேன்; நான்வரு முன்னர்
பெரும்போர் விளைத்துப் பீடுசா லாற்றின்
கரைவழி மாலுவுங் கலங்கித் தானையும்

ஓடுமா றிழைத்தன னொருதனிப் படையான் !
ஓடைமா களிற்றி னுயர்முடி பிளக்க
வடிந்திடுங் குருதி வான்பரந் தென்னக்
குடவரை செவ்வான் குலவக் கதிரவன்
மறைந்தனன் ; பகலில் வாளமர் புரிந்த
திறந்தனை முற்றுந் தெரிந்திட விரும்பினன் ;
நாதனைத் தருமின் !

(மதுரைப்புலவனுடன் விசுவநாதன் உள்ளேபிரவேசிக்க)

ஜீவராய். நண்பன் வந்தனன் !
தீதறச் செலுத்திய செருவெலாங் கூறப்
போந்தனன் மேதகை.

விசுவ. போர்த்திறங் கூற
வேந்தனே !' யெய்திலன் ; வீரங் குன்றிய
குமரன் செய்தியைக் குறித்தவ் வடில்ஷா
அமரினை நிறுத்தி யன்பினை வேண்டினன்,
ஆற்றங் கரையி னகன்பொழி லிருந்தனன் ;
சாற்றுமா றருள்க. தண்புன லாற்றின்
தென்கரை மருவுஞ் செழும்பதி யாவும்
உன்பதி யாக்க வுடன்படு வாரேல்
ஒக்குமே யுள்ளம் ?

அச்சு. உயர்தனிச் சிலையோய் !
இக்கரை நாட்டை யீவரே லுன்றன்
கருத்துட னொக்குமென் கருத்தும் ; ஆதலின்
திருத்துக மேல்வினை.

விசுவ. திக்கெலாம் புகழும்
இறைவனே ! யேகி யிசைத்தவா முடிப்பன்—
துறைபல பாடுஞ் சொற்பயில் புலவ !
அரசனோ டிருத்தி.

(விசுவநாதன் வெளியேசெல்ல)

அச்சு. அருந்தமிழ்ப் புலவ !
முரசொலி யெழுந்த மொய்ம்போர்க் களத்துத்
தலைவனோ டிருந்தனை ; தமரவா றிதிபோல்
மலைந்திரு சேனையும் வளைந்தவா றியம்புக.

மதுரைப்புல. கடல்கிளர்ந் தெழுந்து கடும்புன லாறுதன்
புடைவர வெதிர்ந்து புக்கதைக் கொள்ளுந்

தன்மைபோல், அரச! தவாநெடும் படைதான்
வன்மையா லுயர்ந்த வளைமதில் ரேய்ச்சூர்
விட்டெழுந் தேகி விரைவினிற் படர்ந்து
துட்ட ரிரும்படை தொலைவுறப் பாய்ந்து
போரிடப் புக்கது. போர்க்களத் தெழுந்த
பேரியி னோசையும் பேராள் முழக்கமுங்
கலந்து களத்திற் கம்பலை மிகுத்தது!
மலைந்திரு சேனையு மயங்கு காலையில்,
வானுற வெழுந்து வளர்ந்த பராகம்
மானிலத் துடனே மற்றைய நான்கு
பூதமுங் கலந்து பொருந்தின போன்றது!
ஓதக் கடல்வா யுலவு மாமையின்
கான்முகந் தெரியக் கருந்தோற் கவசம்
மேன்முழு தணிந்து வீரவாட் கேடயம்
கைகளிற் றரித்துக் கழலணி வீரர்
மொய்களந் திரிந்தனர்! முகிலிரு கூறுகள்
குளிர்வா னெதிர்ந்து கொட்டுந் தாரைபோல்
வளைந்திரு படைகளும் வாளிக ளேவின!
பரசுகொண் டெற்றினர்; பட்டய மோச்சினர்;
விரசுவார் தம்மை வீட்டினர் வாளால்;
ஆறுபோ லுதிர மமர்க்களத் தோடப்
பாறுகள் சுற்றிடப் பதாதியிற் பல்லோர்
புண்படக் கலங்கியும் பொத்திடு மம்பினால்
மண்படக் கிடந்தும் மயங்கியு மயர்ந்தார்!
ஊனு முதிரமு மூறிய சேற்றிற்
முனை வீரர்கள் தளர்ந்து தவித்தனர்!
துதிக்கையால் யானை தூக்கிவா னெறியக்
குதித்திறந் தார்சிலர் குருதிவெங் கடலில்!
கரலா கவத்தினுற் களத்திடைத் திரிதந்
தொருவனே பலர்போ லுணர்த்தி நின்றனன்!
ஆயதோர் காலையி லடையலர் திகைத்து
மாயமே வல்ல வாட்படை யவுணர்
பூண்டினை யொழிக்கப் புகுந்தமா லிவனோ?
காண்டிவ மெடுத்துக் காண்டவ மழித்த
தனஞ்சய னிவனோ? தக்கன் வேள்வியைச்

சினங்கொடு தொலைத்த சிவபிரா னிவனோ?
என்றுரைத் தெங்கு மிரியலுற் றனரால்!
அன்றொரு காலையி லரவின மெல்லாம்
அனலிடைச் செலுத்தி யாற்றிய வேள்விச்
சனமே சயன்போற் சமரிடை வீரன்
தந்தியின் கரங்களைத் தள்ளினன் களத்தில்!
விந்தைவா ழிவன்படை வீரர்க ளஞ்சா
நெஞ்சராய்ப் புகுந்து நெருக்கினே ரலரை
யஞ்சுங் கலங்க வடித்தனர்! மாலுவும்
ஓடினன்; அவனுட னோடினர் துருக்கர்!
கோடொளிர் கரிகளுங் குதிரையி னீட்டமுங்
கொண்டன மாகிக் கொற்றமும் படைத்தோம்!
எண்டிசை மதிக்கு மிறைவனே! யிதுதான்
போர்த்திறம்!

அச்சு. புலவ! புகன்றனை; மகிழ்ந்தேன்;
நேர்த்தியே! நாதன் நினைத்தது முடித்தான்.
வார்புன லாடி வைகறைப் பொழுதில்
நேர்கடன் முடித்து நிற்குதும்; காலையில்
உடன்படு நெஞ்சனு யுறுவ னடில்ஷா;
அடைக்கலம் புகுமே லன்பினைத் தருவோம்;
இன்றுயில் கொண்மி னெவருங்
குன்றிடை யுறங்குங் கோளரி போலவே!

களம்—3. முற்றும்.

அங்கம்—5. களம்—4.

சமாதான உடன்படிக்கையைச் செய்யச்சென்ற விசுவநாதன் இஸ்மேலடில்ஷா முதலானவர்களோடு இரவெல்லாம் உரையாடி உடன்படிக்கையின் நிபந்தனைகளைத் தீர்மானித்து ஓர்பத்திரம் எழுதிமுடித்தான். மறுநாட்காலையில் இஸ்மேலடில்ஷா கிருஷ்ணநதியைத்தாண்டித் தென்கரைவந்து அச்சுதனைக்கண்டு வணங்கி நட்புக்கூறச் சமாதானம் நிகழ்ந்தது. இருவரும் ஒருநாளவ்விடம் நட்புடன்றங்கிப் பிறகுதம்தம் நகர் நோக்கிச்சென்றனர்.

அங்கம்—5. களம்—4.

இடம்.—கிருஷ்ணாநதியின் தேன்கரை. அரசன் படைவீடு.

காலம்.—காலே.

(அச்சுதன், ஜீவராய், சதாசிவராய், இராமன், கச்சிப்புலவன், மதுரைப்புலவன் முதலானவர்கள் வீற்றிருப்ப)

(நேரிசையாசிரியப்பா.)

அச்சு. இதம்பெற நாத னியற்றின னரிய
உதவிதான். இதனை மறத்த லொண்ணுமோ?
அரச னடில்ஷா வணைந்திடு முன்னர்
உரிமையிற் றெரித்தன னுறுமுடன் படிக்கையிற்
காட்டிய நிபந்தனை காவதங் கொண்ட
நாட்டினைத் தருதலும் நயந்த வர்த்தகத்
துறைமுக வடுகலத் தொடுகட லுலவும்
நிறைமரக் கலங்கள் நின்று துயல்வரப்
பொதுவிட மாக்கலும் பொருந்து மிரண்டென ;—
கதுமென வெழுந்த கடும்போர் முடிந்தவா
வியப்பே! யினியவர் விழைவுமேற் கொண்டு
பெயர்ந்திவண் வருவதாய்ப் பேசினர் ; அதுபோல்
வந்தில ரென்னே?

(விசுவநாதனும் சலாபத்கானும் உள்ளேவர.)

வார்கழல் வணைந்த
தந்திரத் தலைவன் றன்னுட னொருவனைக்
கொண்டிவண் வந்தனன்.

ஜீவராய். கொற்றவ! இவன்முன்
திண்டிறற் சலாபத் கானெனுந் தெவ்வர்
படையின் றலைவன் ; பரிவுமிக் குடையான் ;
கடைநெடு வேற்கட் காஞ்சனை சிறையை
மீட்குநா ளுதவிய மீளி மொய்ம்பினன்.

அச்சு. வாட்படை வீர! நின் வரவுக் குவந்தனன்
அமர்க! நின் னரச னாணையென் கூறுக.

சலாப. தமருட னரசன் சார்ந்தன னுனது
பாசறை வாயிலின். பார்த்திவ! வுன்றன்
நேசமே நாடிய நிருபனை நின்முன்
அழைத்து வருவதோ?

அச்சு. அன்பனைத் தருக.

(சலாபத்கான் வெளியே செல்ல)

தழைத்திடும் புகழோய்! தரியலர் தம்மை
வெந்நிடத் துரத்தி வெற்றியை நாட்டி
எந்நில மெனக்கே யீந்தனை யென்பதென்?
நேமிசூழ் வலயம் நின்றநின் பெருமைக்
காமிதோர் செயலோ? அன்ப! நின் னாற்றல்
யாவரு முணர்வர் யானினி யுரைப்பதென்?
மேவிய காரியம் மேம்பட முடிந்ததோ?

விசுவ. வெற்றிவே லிறைவ! வீங்குநீ ராற்றிற்
கொற்றமே காட்டுங் கொடிபயில் நாவாய்
செலுத்தியான் செல்கையிற், றிகழிரு கரையும்
நிலைத்திடுஞ் சேனையி னேயமே காணப்
பாதலத் துறைவார் பரிவினுற் றதுபோல்,
காதலுற் றவர்நிழல் கடிபுன லகத்திற்
கலந்துற வாடின; காவல ரிருவரும்
நலந்தனை நினைத்தவர் நன்னேக் குறுமுன்,
இருவர்தம் படையிருந் தெழுந்த தூளிகள்
மருவிக் கலந்தன; வான்கரை யிரண்டுந்
துன்னிய சேனையிற் றுவைத்த பேரியின்
மன்னிய பேரொலி வான்முக டளாவிச்
சேர்ந்து முழங்கின; சேனை யிரண்டிலும்
நேர்ந்தபல் கொடிகளி னெற்றியைத் தைவருங்
காற்றினங் களித்துக் கலந்தன; காவல!
சாற்றுவ தென்னினிச்? சமாதா னம்பெற
வந்தனன் மன்னவன்.

அச்சு. மகிழ்வு மெய்தினன்;
நந்தங் காலமும் நன்மை பயந்தது!

(இஸ்மே லடில்ஷா, மாலூகான், கும்மல்கான், அஷாடாகான், சலாபத்கான், அமீர்பீரித், உம்மதுஷா முதலானவர்கள் உள்ளே வர;— அச்சுதனும் அவன் சபையோரும் எழுந்துநிற்ப,— இஸ்மேலடில்ஷா முன்வந்து அச்சுதனைப்பணிய)

கச்சி. (மதுரைப்புலவனுடன் தனியே)
மதுரைப் புலவ! மமதை யடங்கிப்

புதுத்தோல் பொருந்தப் புனைதோ லுரிக்கும்
விடப்பல் லிழந்த வெங்கண கம்போல்
அடையல னச்சுவ பதிநாட் டரசன்
நரையென வெளுத்த நொய்தா மங்கியைச்
சிரமுதற் கால்வரை சேர்த்தி விஜய
நகரா ளரச னரேந்திரன் முன்வந்
தகமிகக் குழைந்தங் கணிமுடி தாழ்த்திச்
சலாமிடு கின்றனன் !

மதுரை. சாகரத் திடையிற்
குலாவுறுங் கராவின் கூர்வாய்ப் பட்ட
கரியினைப் போற், படைக் கடலிற் பகைவன்
அரசனச் சுதனை யஞ்சுகின் றனனால் !

அச்சு. அன்பினை வேண்டு மரசனே ! வருக !
முன்புள வருத்த முழுவதும் போக்கி
இன்றுதொட் டிருவரும் இசைந்த மனத்தராய்
ஒன்றுபட் டொழுகுத லுயர்நலம் விளைக்கும் ;
ஆதனத் தமர்க !

இஸ்மேல். அரச ரேறே ?
ஆதரிப் பாயென் றடைந்தவர் தம்மைப்
போற்றும் பெருந்தகைப் புண்ணிய பூபதி
ஏற்றமார் நரச இராஜ குமாரனே !
நின்வயி னப்புகழ் நிலவுறு கின்றதால் !
அன்புட னிருவரும் அமர்ந்திட லினிதாம்.

அச்சு. படைகளின் றலைமை படைத்தீர் ! கேண்மின் !
நடுநிலைப் படிநீர் நாட்டிய நிபந்தனை
யாவையுஞ் செப்பேட் டெழுதுமின் ! யாங்கள்
ஆவலின் முத்திரை யதனி லிடுவோம்—
அன்பனே ! யச்சுவ பதிநாட் டரசே !
இன்பமே விளைக்கு மெழிலார் சோலையின்
வம்பவிழ் மலரால் வயங்கு நதிக்கரை
நம்படை சூழ்ந்திட நாங்களித் திருந்து
விருந்துண் டவரவர் வெற்றித்
திருநகர்க் கெழுவோஞ் சேனைசூழ் வரவே !

களம்—4. முற்றும்.